சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை,

அரசாணை (நிலை) எண். 32

நாள் 12.03.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
குரோதி, மாசி 28

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள் 18.08.2010.
2. அரசாணை (நிலை) எண்.139, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–1) துறை, நாள் 28.05.2012.
3. அரசாணை (நிலை) எண்.21, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP–3(2)) துறை, நாள் 30.05.2017.
4. அரசாணை (நிலை) எண்.95, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 16.12.2024.
5. அரசாணை (நிலை) எண்.02, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP–3(2)) துறை, நாள் 18.02.2025.

------

ஆணை:–

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சத்துணவுத் திட்டத்தில் காலியாக உள்ள மொத்த சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களில், 8997 சமையல் உதவியாளர் பணியிடங்களை மட்டும் மாதம் ரூ.3000/– வீதம் தொகுப்பூதியத்தில் நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகள் நலத்துறை அமைத்துள்ள நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சத்துணவுத் திட்டத்தில் பணி நியமனம் பெற பின்வரும்

குறைப்பாடுள்ள மாற்றுத் திறனாளிகள், கீழ்க்காணும் பணிகளுக்கு தகுதியானவர்களெனக் கண்டறிந்து, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

| Sl. No. | Name of the Post | Categories of Disabilities to be accommodated |
|---|---|---|
| 1. | a) Noon Meal Organizer | Low Vision (LV) corrected with Spectacles<br><br>Hard of Hearing (HH) corrected with hearing aid<br><br>Dwarfism (Dw)<br><br>Acid Attack Victims (AAV)<br><br>Locomotor Disability (LD) (OL&OA with 40-80%, Both legs affected and using appropriate assistive devices for independent mobility, like crutches together with 3 wheeled scooter)<br><br>Leprosy Cured (LC) (40%, no deformity in both upper limbs, with intact sensory and motor components).<br><br>(only female candidates) |
| | b) Noon Meal Cook and Noon Meal Cook Assistant | Low Vision corrected with Spectacles<br><br>Locomotor Disability (LD)<br><br>Leprosy Cured (40%, no deformity in both upper limbs, with intact sensory and motor components)<br><br>Acid Attack Victims<br><br>Specific Learning Disability (Mild)<br>(only female candidates) |

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இந்நேர்வினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கலாமெனவும், அரசாணை (நிலை) எண்.02, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP-3(2)) துறை, நாள் 18.02.2025-ல் அந்தந்த பணியிடங்களுக்கு பொருத்தமான மாற்றுத் திறன்கள் என (Categories of Disabilities) கண்டறியப்பட்டுள்ள மாற்றுத் திறன்களைப் பெற்றுள்ள தகுதியான மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு 4 சதவீதம் இட ஒதுக்கீட்டில் நிரப்பலாமெனவும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநிலக் கணக்காயர்,
சென்னை-18/35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் - மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-9.
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/03/2025

பிரிவு அலுவலர்

12/3/25